TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093847

1. District மாவட்டம் : தருமபுரி
PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
Year: ஆண்டு
FIR No.: மு.த.அ. எண்: 7/AC/2019
Date: நாள்: 12.12.2019

2. (i) Act சட்டம்: The Prevention Of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 09.12.2019 ம் தேதி பகல் சுமார் 1.00 மணி
10.12.2019 ம் தேதி மதியம் மணி
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை 11.12.2019 ம் தேதி காலை சுமார் 08.00 மணி, 10.30 மணி, 11.30 மணி 11.45 மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2019
Time : நேரம் 11.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம் பென்னாகரம் சுமார் 30 கி.மீ மேற்கு

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. ப. மாதேஸ்வன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. பெரியண்ணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2019
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் -
Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் கோழி வியாபாரம்
(g) Address : முகவரி தொன்னகுட்டப்பட்டி, குண்டுகோட்டப்பள்ளம் கிராமம், பென்னாகரம் வட்டம், தருமபுரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. மணிவண்ணன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், பாப்பாரப்பட்டி காவல் நிலையம் தற்போது குற்றப் பிரிவு (சிறப்பு) பென்னாகரம், தருமபுரி மாவட்டம் மற்றும் ஒரு போலீஸ்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……—…… Rank …………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………—……….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……—…… பதவி …………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 12/12/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
M. மாணிதுயன்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12. 12. 2019 at 15.00 hrs
12.12.19

Name: பெயர் A.S. ஜாபர் சித்திக்.
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ………
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.



[signature]
12/12/2019

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

*****

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், கௌரிசெட்டிபட்டி, குண்டுகாரபள்ளம் என்ற முகவரியை சேர்ந்த முனியன் என்பவரின் மகன் திரு.மு.மாதையன், (46/19) என்பவர் இன்று 12.12.2019–ந்தேதி காலை 11.00 மணிக்கு தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி காவல் ஆய்வாளரிடம் வாய்மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு.

நான் தற்போது பென்னாகரம் வட்டம், கௌரிசெட்டிபட்டி, குண்டுகாரபள்ளம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் கடந்த 6 வருஷமாக கோழி வியாபரம் செய்துவருகிறேன். மேலும் எங்களுக்கு சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது, ஆனால் கையொப்பம் மட்டும் போட தெரியும். எனக்கு 2 பெண் குழந்தைகள் மற்றும் ஒரு பையன் உள்ளார்கள். எனது பையன் பெயர் கோபி, அவன் டெம்போ டிரைவராக வேலை செய்து வருகிறான். அவ்வப்போது மேஸ்திரி வேலையும் செய்து வருவான். அவனுக்கு திருமணம் ஆகவில்லை. சுமார் 3 மாதங்களுக்கு முன்பு அவன் ஒசூர் பக்கமுள்ள அஞ்சசெட்டியிலிருந்து மேஸ்திரி வேலை முடித்துவிட்டு ஒகேனக்கல் வழியாக அவனுடைய நண்பனுக்கு சொந்தமான டூவிலரில் வந்தபோது ஒகேனக்கலில் வைத்து ஆக்சிடென்ட் ஆகிவிட்டான். இதுசம்மந்தமாக அவன் எங்களுக்கு தகவல் எதுவும் தெரிவிக்கவில்லை. சுமார் 20 நாட்கள் பென்னாகரம் ஜி.எச் ஆஸ்பித்திரியில் தங்கி டிரிட்மெண்ட் எடுத்து கொண்டான். அதற்கு பின்பு எனக்கு தகவல் தெரிந்து நானும், எனது மனைவியும் சென்று பார்த்தோம். இது சம்மந்தமாக ஒகேனக்கல் போலீஸ் ஸ்டேசனில் கேஸ் போட்டிருந்தார்கள். பிறகு அந்த டூலரை போலீசார் சொன்னதின் பேரில் தருமபுரி ஆர்டிஒ ஆபிசுக்கு கொண்டுவந்து இன்ஸ்பெக்சன் முடித்துவிட்டு மீண்டும் ஒகேனக்கல் போலீஸ் ஸ்டேசனரில் ஒப்படைத்தேன். அந்த வண்டிக்குண்டான ஆவணங்கள் ஏதுவும் என் மகன் கோபி என்னிடம் ஒப்படைக்கவில்லை. ஒகேனக்கல் போலீசார் அந்த வண்டியை என்னிடமே ஒப்படைத்தார்கள். நான் அந்த வண்டியை என்னுடைய வீட்டிற்கு கொண்டுவந்து வைத்து கொண்டேன். அதன்பிறகு எனது மகன் வேலைக்கு சென்றுவிட்டான். போன திங்கட்கிழமை 09.12.2019–ந்தேதி சுமார் 11.00 மணிக்கு பென்னாகரம் கிரைம் போலீசார் 3 பேர் எனது வீட்டிற்கு வந்து அந்த டூவீலரை எடுத்து கொண்டு என்னை பென்னாகரம் போலீஸ் ஸ்டேசனுக்கு

வரசொல்லிவிட்டு சென்றுவிட்டனர். நான் பென்னாகரம் போலீஸ் ஸ்டேசனுக்கு சுமார் மதியம் 1 மணிக்கு போனேன். அப்போது அங்கிருந்த அந்த கிரைம் போலீசார் 3 பேரும் என்னிடம், உனது பையன் கோபி மீது கர்நாடகவிலும், நம்ம ஊரிலும் ரேப் கேஸ் மற்றும் திருட்டு கேஸ் நிறைய உள்ளது. அதனால் அவன் மீது கேஸ் போடாமல் இருக்கவேண்டுமானால் பணம் ரூ.40 ஆயிரம் எங்களுக்கு தரவேண்டுமென அந்த கிரைம் டீமிலிருந்த மலர்வண்ணன் என்ற எஸ்.ஐ என்னை தனியாக அழைத்து கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணமில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நீ பணம் தரவில்லையென்றால் உன் மகனை நாங்கள் எப்படியாவது இரண்டொரு நாளில் பிடித்துவிடுவோம் என்று சொன்னார். நான் அதற்கு அவன் தப்பு செய்திருந்தால் அவனை பிடித்து கொள்ளுங்கள், ஆனால் என்னிடம் அவ்வளவு பணமில்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அன்று மாலை சுமார் 07.30 மணியளவில் எனது மகன் இண்டூர் போலீஸ் ஸ்டேசனில் இருப்பதாக தகவல் தெரிந்து நானும் எனது மனைவியும் இண்டூர் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றோம். நான் மட்டும் எனது மகனை பார்த்தேன். என்னை கண்டு அவன் வேதனைப்பட்டான். பின்பு அவனை போலீசார் போலீஸ் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு தருமபுரி நோக்கி சென்றுவிட்டார்கள். நானும் எனது மனைவியும் வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்னர் தான் எனக்கு தெரிந்தது, ஒரு கேசில் போலீசார் அவனை ரிமாண்ட் செய்துவிட்டார்கள் என்று. அதன்பின்பு, அந்த கிரைம் டீமிலிருந்த மலர்வண்ணன் என்ற எஸ்.ஐ 10.12.2019–ந்தேதி மதியம் அவரது செல்போன் 94981 69359 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் 94438 12166 எண்ணிற்கு கால் செய்து பணம் கொண்டுவந்து கொடுக்குமாறு சொன்னார். அதற்கு பின்பு, அன்று சாயந்திரம் 94437 79122 என்ற செல்போன் எண்ணிலிருந்து என் செல்போன் எண்ணிற்கு பேசி பணம் கொடுக்குமாறு கேட்டார். அவர் ஒவ்வொரு முறை பேசும்போதும், நான் அவ்வளவு பணம் என்னிடமில்லை, என்னுடைய ஓனரிடம் கேட்டு பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டேன். அதற்கு பின்பு மீண்டும் 11.12.2019–ந்தேதி அதே செல்போனிலிருந்து மலர்வண்ணன் எஸ்.ஐ காலை சுமார் 8 மணிக்கு 94981 69359 என்று எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு கால் செய்து மீண்டும் பணம் கேட்டார். நான் முயற்சி செய்கிறேன் என்று சொல்லிவிட்டேன். மீண்டும் அதே நம்பரிலிருந்து காலை 10.30 மணிக்கு போன் செய்து பென்னாகரம் போலீஸ் ஸ்டேசனுக்கு வரச்சொன்னார். நான் அதற்கு பணம் ரெடியாகவில்லை, ரூ. 40 ஆயிரம் கொடுங்க என்கிறார்கள், நான் ரூ.40 ஆயிரம் எப்படி சார் எடுத்துத்திட்டு வரது என்று சொன்னதற்கு அவர் ரூ.40 ஆயிரம் தேவையில்லை ஒரு 25 ஆயிரம் ரூபாய் எடுத்துட்டு வந்து கொடு, உன் பையனை கர்நாடக

போலீசுக்கு காட்டி கொடுக்காம, லோக்கலில் உள்ள ஆடு திருடுன கேசு மற்றும் திருட்டு கேசுகளை சரிபண்ணிடலாம் என்றும் சொன்னார். பின்னர், மீண்டும் அதே செல்போனிலிருந்து அன்று காலை 11.30 மணியளவில் சீக்கிரம் பென்னாகரம் ஸ்டேனுக்கு நேரில் வந்து தகவல் சொல்லிட்டு போ என்று சொன்னார். அதற்கு பின்பு, அன்றே சுமார் 11.45 மணியளவில் மலர்வண்ணன் எஸ்.ஐ அவரது செல்போன் 9443779122 என்ற எண்ணிலிருந்து எனது செல்போனுக்கு பேசியபோது, நான் பணம் ரெடியாகவில்லை, பணம் வாங்கிவருவதற்காக தருமபுரிக்கு போயிட்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் கோபப்பட்டு நேரில் வரவில்லையென்றால், உன் பொண்டிட்டியை இழுத்திட்டு வந்திடுவோம், உன்னிடம் திருட்டு வண்டி உள்ளதென்று கேஸ் போட்டுடிவோம் என்று மிரட்டி இன்ஸ்பெக்டர் பேசுவதாக சொல்லி அவருக்கு அருகிலிருந்த நபரிடம் செல்போனை கொடுத்தார். அவரும் என்னை எங்கேயிருக்கிறாய் என்று தெரிந்து கொண்டு மாதையா இதெல்லாம் உனக்கு நல்லதல்லா, அன்று டிஎஸ்பிடம் என்ன உத்தரவாதம் வாங்கி கொடுத்தேன் என்று உனக்கு தெரியும், அதனால் நீ மீண்டும் டிஎஸ்பிடம் நிக்கவேண்டி வரும் என்று சொன்னார். அதற்கு நான் இன்று ஒரு நாள் பொறுத்து கொள்ளுங்க சார், பணம் ரெடி பண்ணிக்கிட்டு வந்திடுவேன் என்ற கெஞ்சி கேட்டேன், அதற்கு அவர் உனக்கு ஒரு நாள்தான் டைம் நாளை பணத்தோடு வந்திடுனும் இல்லையென்றால் உன்னை டிஎஸ்பிகிட்ட கொண்டு போயிவிட்டுவிடுவேன் என்று மிரட்டினார். அந்த செல்போனில் இரண்டாவதாக பேசிய நபர் எனக்கு யாரென்று சரியாக தெரிவில்லை. மலர்வண்ணன் எஸ்.ஐ மற்றும் அந்த நபரும் கேட்ட பணத்தை என்னால் உடனடியாக ரெடிபண்ணமுடியவில்லை. என்னிடம் ரூ.16 ஆயிரம் மட்டுமிருந்தது. மீதி பணம் ரூ.9 ஆயிரம் இல்லாததால் தருமபுரி டவுனில் நெய்காரன்கடையில் எனது மனைவின் நகையை அடமானம் வைத்துவிட்டு ரூ.9 ஆயிரத்தை கடனாக பெற்று கொண்டேன். கிரைம் டீமில் வேலை செய்யும் மலர்வண்ணன் எஸ்.ஐ மற்றும் என்னுடன் போனில் பேசிய மற்றொரு போலீஸ் ஆகிய இருவருக்கும் அவர்கள் இலஞ்சமாக கேட்ட பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் அவர்கள் கேட்ட பணம் ரூ.25 ஆயிரத்துடன் இன்று அவர்களை சந்திக்க உள்ளேன். அதனால் அவர்கள் இருவர் மீதும் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னிடம் அவர்கள் இருவரும் செல்போனில் என்னிடம் பேசி பணம் கேட்ட குரல் ரெக்கார்டு எனது செல்போனில் பதிவாகியுள்ளது, அந்த செல்போன் கார்பன் கம்பெனியாகும், அந்த செல்போனையும், நான் எனது மனைவியின் நகையை அடமானம் வைத்ததற்கான இரசீதின் ஜெராக்ஸ் நகலையும் தங்களிடம் ஆஜர் செய்கிறேன்.

படிக்க கேட்டேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் M.மாதையன்,12.12.19 Sir, recorded the statement of the informant Tr.M.Madhaiyan in the office computer on 12.12.2019 between 11.00 hrs to 11.45 hrs by me and read over to him, Which is admitted to be correct. A preliminary verification conducted on the general reputation of the accused officials reveals that to be not good and the antecedents of the informant was also verified and also it reveals that nothing came to adverse. As the information discloses a cognizable offence, a case in Dharmapuri V&AC Cr.No.7/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 12.12.2019 at 12.45 hrs. The original F.I.R, the statement of the informant, a Korbann mobile phone model K9 containing IMEI Nos.91162555569540 and 911626555569557 and a Joy 03/19 Micro SD 4 GB Memory card and a Xerox copy of the chit for the receipt of Jewel loan of Rs.9,000/- produced by the informant while lodging along with his report are sent to the Hon'ble Court of Special Judge/Chief Judicial Magistrate, Dharmapuri. Copies of FIR were sent to the officials concerned.

12/12/19

Inspector of Police
V&AC
Dharmapuri.